ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி: 31.12.2011.

## புத்தாண்டுச் செய்தி

2011ஆம் ஆண்டு நல்ல பல உயர் நிலைகளை நமக்கு கொண்டுவந்து சேர்த்திருந்தாலும், ஆண்டின் இறுதியில் இயற்கைச் சீற்றமான 'தானே' புயல் மூலம் மிகப்பெரிய பேரிழப்பை நமது புதுச்சேரி மாநிலத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

எமது அரசு அனைத்து மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கை விரைவில் திரும்ப உரிய துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மக்களின் ஏகோபித்த நம்பிக்கைக்கு உரிய எமது அரசு, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பாதுகாப்பான, வளமானதொரு நல்வாழ்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துகொள்கிறேன்.

இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து புதுச்சேரி மாநில மக்கள் முழுமையாக மீண்டு, அனைவரது இல்லங்களிலும் எல்லா வளங்களையும் மகிழ்ச்சியையும் கொண்டுவந்து சேர்ப்பதாக மலருகின்ற இந்தப் புத்தாண்டு அமையட்டும் என்று கூறி, அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

✆ அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413–2333135 இல்லம்: 2271232